# ‘மியாட்’டில் கல்லீரல் நோய்க்கு பிரத்யேக மையம்

சென்னை, ஜூன் 7–

சென்னை, ‘மியாட்’ மருத்துவமனையில், கல்லீரல் நோய் பாதிப்புகளை முன்கூட்டியே அறிந்து, உடற்பயிற்சியுடன் கூடிய சிகிச்சை பெறும் வகையில், ‘கல்லீரல் ஜிம்’ நேற்று துவங்கப்பட்டது.

## மது அருந்துதல்

மாறிவரும் கலாசாரங்களால் ஆண், பெண் மது அருந்துதல், கொழுப்பு நிறைந்த உணவுப் பொருட்கள் சாப்பிடுதல், உடற்பயிற்சி இல்லாதது போன்ற காரணங்களால், கல்லீரல் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்தியாவில், ஐந்து பேரில் ஒருவர், தற்போது, கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை, விரைவில் அதிகரிக்க உள்ளது.

இதை கருத்தில் கொண்டு, சென்னை, ‘மியாட்’ மருத்துவமனையில், கல்லீரல் நோய் பாதிப்புகளை முன்கூட்டியே அறிந்து, உடற்பயிற்சியுடன் கூடிய சிகிச்சை பெற வசதியாக, ‘மியாட் கல்லீரல் ஜிம்’ நேற்று, துவங்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தை, மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், துவக்கி வைத்தார். இதில், இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ், துறை தலைவர் சுரேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இது குறித்து, பிரித்வி மோகன்தாஸ் கூறியதாவது:

சிகிச்சைக்கு வருவோரில், 90 சதவீதம் பேர், கல்லீரல் பாதிப்பு தெரியாமல் வருகின்றனர்.

## மாற்று சிகிக்சை

கல்லீரல் முற்றிலும் பாதிக்கப்பட்டால், கல்லீரல் மாற்று சிகிச்சை தான், ஒரே தீர்வு. இதற்கு, 30 லட்சம் ரூபாய் செலவாகும் என்பதால், எல்லாராலும் சிகிச்சை பெற முடியாது.



மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று சிகிச்சை தடுப்பு திட்ட துவக்க நிகழ்ச்சியில், மியாட் மருத்துவ மனை கொள்கை பலகையில், கல்லீரல் துறை இயக்குனர் சுரேந்திரன், நிர்வாக இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ் கையெழுத்திட்டனர். உடன், சேர்மன் மல்லிகா மோகன்தாஸ்.

எனவே, நோய் பாதிப்புகளை துவக்கத்தில் கண்டறிந்து தடுக்கவே, கல்லீரல் ஜிம் துவங்கப்பட்டுள்ளது.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக, ‘மியாட் கோல்டு ஸ்டாண்டர்டு’ என்ற திட்டமும், நேற்று துவங்கப்பட்டது.

இவ்வாறு, அவர் கூறினார்.

இதில், ‘நோயாளிகளுக்கு, சர்வதேச தரத்தில் சிகிச்சை அளிப்போம்’ என, டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள், உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.